(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 5048** **Sub. Code : C 3 AT**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2012.

Third Semester

தமிழ்

விருப்பப்பாடம் — ஒப்பிலக்கியக் கோட்பாடுகள்

(For those who joined in July 2008 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. உலக இலக்கியங்களிடையே காணப்படும் பொதுத் தன்மைக்கு எது அடித்தளம்?

2. "Literature" என்ற சொல் இலக்கியத்தைக் குறிக்கும் முன்னர் எப்பொருளைக் குறித்தது?

3. ஒப்பிலக்கியம் என்பதற்கு நிறைவான வரைவிலக்கணம் கூறிய அமெரிக்கப் பேராசிரியர் யார்?

4. கவிதை உள்ளிட்ட கல்வி வளர்ச்சி நிலையை ஆய்வதாக ஒப்பிலக்கியம் அமைய வேண்டும் என்று வற்புறுத்தியவர் யார்?

5. "ஹோமரின் காவியங்கள் நாட்டுப்புறப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டவை" என்ற கருத்தை நிறுவிய ஆய்வாளர் யார்?

6. மொழிபெயர்ப்பு குறித்து எதிர்மறையான கருத்தைக் கூறியவர் யார்?

7. படைப்பாளி உளவியல், படைப்பாக்க உளவியல் என்று உளவியல் கூறுகளைப் பகுத்துக் கூறியவர் யார்?

8. கவிஞனுக்கு வாய்க்கும் அகத்தெழுச்சி (inspiration) என்றால் என்ன?

9. வீரயுகப் பாடல்களின் இயல்புகளை வரையறை செய்து கூறி, "Heroic poetry" என்ற நூலை எழுதியவர் யார்?

10. சங்கப் பாடல்களைத் தமிழ் வீரயுகப்பாட்டு 'Tamil Heroic Poetry' என்று நிறுவியர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) இலக்கியத்தின் பொதுத் திறன்களை எவ்வாறு மதிப்பிடுவது? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒப்பீடு (simple comparison) ஒப்பிலக்கியம் (comparative literature) இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பற்றிக் குறிப்பு வரைக.

12. (அ) ஒப்பிலக்கியம் என்ற பெயர் குறித்து நடைபெற்ற வாத விவாதங்களைத் தொகுத்துக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஒவ்வொரு நாட்டினமும் தத்தமது தேசிய இலக்கியங்களில் உயர்ந்தவை என்ற சிந்தனையால் ஏற்பட்ட விளைவு பற்றிக் குறிப்பு வரைக.

13. (அ) அறிவியல் முறையின் அடிப்படைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பிறப்புறவு ஆய்வு முறையின் அடிப்படைக் கூறுகளை விளக்குக.



14. (அ) இலக்கியம் எங்ஙனம் ஓவியமாகவே மாறிவிடுகிறது? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஓவியத்திற்கும் இலக்கியத்திற்கும், தொடர்புகள் எவ்வெவ் அடிப்படைகளில் அமைகின்றன?

15. (அ) சங்கப் பாடல்களில் காணப்படும் வீரயுகப் பண்பிற்கு ஒரு சான்று தருக.

(அல்லது)

(ஆ) சங்கத் தன்னுணர்ச்சிப் பாடல்களுள் தனிப்பாட்டு (Monody) பற்றிக் கூறுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

16. (அ) பண்டைத் தமிழ் இலக்கணங்களில் காணப்பட்ட ஒப்பீட்டுச் சிந்தனை பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) முன்னைய ஒப்பீடுகளின் தன்மை பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறுக.

17. (அ) இருபதாம் நூற்றாண்டின் தொடக்க நிலையில் தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வில் ஈடுபட்டவர்கள் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய ஆய்வு வரலாற்றில் இரண்டாம் படிநிலையில் செயல்பட்ட ரகுநாதன், கைலாசபதி போன்றோரின் ஆய்வுகளின் பயன்களை எடுத்துக்காட்டுக.

18. (அ) கிரிம் சகோதரர்களின் கருத்தும் தொண்டும் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இயற்கை அறிவியல் கோட்பாட்டினை விளக்கித் தமிழ் இலக்கிய வகையின் வளர்ச்சியை மதிப்பிடுக.

19. (அ) இலக்கியத்தில் உருக்காட்சி (Image) பற்றிய செய்திகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) இலக்கியங்களில் புராணக் கதைகள் பெறுமிடம் பற்றிக் கட்டுரை எழுதுக.



20. (அ) சங்கப்பாடல்களில் இயற்கைப் புனைவு பெறுமிடம் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கிரேக்க – சங்க இலக்கியங்களில் குழுப்பாடல்களின் பண்புகள் பற்றிக் கூறுக.

---